[1978 மார்ச் 13

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்கள்.

* 532 வினா—திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள கொக்கிரக்குளம் கோர்ட்டுகள் ஹைக்கிரவுண்டுக்கு மாற்றல் குறித்து அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: (*a*) Yes.

(*b*) The representation received from the public of Tirunelveli, Merchants and Bar Association of Tirunelveli objecting to the shifting of Courts in Tirunelveli from Kokkirakulam to High Grounds, was referred to the High Court, Madras for its remarks. The High Court has stated that the site in the High Grounds, Medical College Campus, was chosen after a comparative study and inspection by the Collector of Tirunelveli District and Sessions Judge, Tirunelveli and on the recommendation of the Public Works Department authorities and that the construction of the combined Court buildings on the new site at Tirunelveli was an imminent necessity and that there should be no going back on the scheme. The Government accepted the views of the High Court.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக திருநெல்வேலி மாவட்டம் கொக்கிரகுளத்தில் இருக்கின்ற கோர்ட்டை ஹைகிரவுண்டுக்கு மாற்றுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எப்போது மேற்கொள்ளப்படும் ? விரைவிலே முடிவுக்கு வந்து நல்ல கட்டிடங்களில் நீதிமன்றங்கள் நடைபெற வைப்பதற்கு இந்த அரசு முன் வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: This is a phased programme. For each year a sum of Rs. 5 lakhs is allotted for the construction of works. The construction of the necessary works will be undertaken because the proposal has been accepted in principle.

சென்னை மத்திய சிறையில் கைதி இறப்பு.

* 533 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மத்திய சிறையில் 1977 ஆகஸ்டு மாதத்தில் பார்னபாஸ் என்ற கைதி இறந்துவிட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?